**செய்தி வெளியீடு எண்:692** **நாள்: 16.10.2017**

## செய்தி வெளியீடு

சாலை விபத்துக்களை குறைக்கவும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளை தவிர்க்கவும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு நடவடிக்கைகள் காரணமாகவும் மற்றும் சாலை பயண்படுத்துபவர்களின் பொறுப்பான நடத்தைகள் காரணமாகவும் 2016ஆம் ஆண்டில் நிகழ்ந்த சாலை விபத்துக்கள் மற்றும் உயிரிழப்புகளை ஒப்பிடும்போது ஜனவரி 2017 முதல் செப்டம்பர் 2017 வரை 4657 விபத்துகளும் மற்றும் 450 உயிரிழப்புகளும் குறைந்துள்ளன. மேலும் போக்குவரத்து துறையால் செப்டம்பர் 2017 மாதத்தில் மட்டும் பல்வேறு போக்குவரத்து விதி மீறல்கள் காரணமாக 31189 ஓட்டுநர் உரிமங்கள் தற்காலிக தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும் தீபாவளி பண்டிகையின் போது அதிவேகம் மற்றும் கவனக் குறைவு போன்ற காரணங்களால் சாலை விபத்துக்கள் அதிகரித்த வண்ணம் உள்ளது. உதரணமாக கடந்த 2016 தீபாவளி பண்டிகையின் போது 818 சாலை விபத்துக்கள் ஏற்பட்டு அதில் 190 உயிரிழப்புகள் ஏற்பட்டது. இந்த 818 குடும்பங்களுக்கு மகிழ்ச்சியான தீபாவளி சோகமயமானது. இது போன்ற சோக விபத்துக்களை தடுக்கும் பொருட்டு அனைத்து சாலை உபயோகிப்போர்களும் போக்குவரத்து விதிகளை கடைபிடித்து “**சாலை விபத்தில்லா தீபாவளியாக**” அமைய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**